# <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| OS.No. 277/2014 | Date : 01.07.2025 | PW 3 |
|---|---|---|
| Name: பச்சமுத்து | த/பெ. செல்லமுத்து | |

**3 முதல் 6 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியும். நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. என் வீட்டு கதவு எண்.11/46 ஆகும். என்னுடைய திருமண தேதிஞாபகம் இல்லை. சுமார் 10 வருடங்கள் முடிந்துவிட்டது. எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். அவர்களுடைய பிறந்த தேதி ஞாபகத்தில் உள்ளதா என்றால் ஞாபகத்தில் உள்ளது. நான் மதியழகனுக்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன். மதியழகன் என்ன வழக்கு யார் மீது எதற்காக போட்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். சேட்டு, கமலா குடும்பத்தினர் மீது மதியழகன் வழக்கு போட்டுள்ளார். கிரய ஒப்பந்தம் போட்ட நிலத்தை கிரயம் எழுதி கொடுக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி சங்கதி மதியழகன் என்னை சாட்சியமளிக்க அழைத்த போது என்னிடம் சொன்னதன் அடிப்படையில்தான் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். மதியழகன் போட்டுள்ள கிரய ஒப்பந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றாலும் அந்த பத்திரம குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றாலும் சரிதான். மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தில் என்ன எழுதியுள்ளது எவ்வளவு தொகைக்கு கிரயம் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கிரய ஒப்பந்த தேதி கூட மதியழகன் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் மதியழகன் சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் கிரய ஒப்பந்த தேதி குறிப்பிடப்பட்டுள்ளது மதியழகன் சொல்லிதான் குறிப்பிடப்பட்டதா என்றால் ஆமாம். பொது அதிகார பத்திரம் எந்த சொத்தை பொறுத்து எழுதப்பட்டது என்றால் சர்வே எண். 304/3 என்ற சொத்தை பொறுத்து எழுதப்பட்டது. அது கமலாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து. மேற்படி பொது அதிகார பத்திரம் எத்தனை ரூபாய் முத்திரை தாளில் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் மேல் தாள் ரூ.100/-ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது. அதற்கு கீழே இரண்டு பச்சை தாள்கள் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பத்திரத்துடன் என்னென்ன பத்திரங்கள் சேர்த்து வைக்கப்பட்டது என்றால் கமலாவின் பெயரிலான கிரய பத்திரம் மற்றும் பட்டா ஆகியவை மேற்படி பவர் பத்திரத்துடன் சேர்த்து தைக்கப்பட்டது. அதை தவிர வேறு ஆவணம் எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா-ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பொது அதிகார பத்திரத்தில் நான் குறிப்பிட்டவாறு கமலாவின் பெயரிலான கிரய பத்திரம் மற்றும் பட்டா ஆகியவை இணைக்கப்படவில்லை என்றால் அந்த கிரய பத்திரத்தை பார்த்து தான்

பொது அதிகார பத்திரம் தயார் செய்யப்பட்டது. நான் பொது அதிகார பத்திரத்தை பொறுத்துதான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றாலும் விற்கிரய ஒப்பந்த பத்திரத்தை குறித்து சாட்சியமளிக்க வரவில்லை என்றாலும் சரிதான். தற்சமயம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பொது அதிகார பத்திரத்தில் "இந்த பொது அதிகார பத்திரமானது நாங்கள் விரும்பும் வரை அமுலில் இருந்துவரவேண்டியது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பொது அதிகார பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டின் கதவு எண் எனக்கு சரியாக நினைவில் இல்லை. அளவு 22 x 22 அடிகள் அளவுள்ளது. அதில் உள்ள சர்விஸ் கனெக்சன் கமலா பெயரில் உள்ளது. சர்விஸ் கனெக்சன் எண் சரியாக நினைவில் இல்லை. சேட்டும், மதியழகனும் உறவினர்கள் என்றால் இல்லை. விற்கிரய ஒப்பந்த பத்திரத்தில் யார் யார் கையெழுத்து செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கிற்கும் என்னுடைய சாட்சியத்திற்கும் சம்மந்தம் எதுவும் இல்லை என்றாலும் சேட்டு தரப்பில் பொது அதிகார பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் மதியழகன் தரப்பில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் மதியழகன் சார்பாக நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. என்னுடைய சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. சேட்டு, மதியழகனும் உறவினர்கள் என்றாலும் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/–பச்சமுத்து

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–A.சண்முகப்பிரியா,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.